
# Srirangam Srimath Andavan Asramam

## Covai

## Special Supplement on
## Chaturmasya sankalpam @Hrishikesh

## 3.07.2023 to 30.09.2023



# ப்ரக்ருதம் ஆண்டவன் ஸ்ரீவராஹ மஹாதேசிகன் சாதுர்மாஸ்ய விரதம் மேற்கொண்ட விவரங்கள்

| எண் | வருடம் | இடம் |
|---|---|---|
| 1 | விகாரி | திருவிடந்தை |
| 2 | சார்வாரி | ஸ்ரீரங்கம் |
| 3 | ப்லவ | சென்னை |
| 4 | சுபக்ருத் | திருப்பதி |
| 5 | சோபக்ருத் | ஹ்ரிஷிகேஷ் |



**At Hrishikesh**



**HH at ganges, Hrishikesh**












रंगम श्रीमत् आण्डवन आश्रमम् मायाकुण्ड ऋषिकेश शाखा
SRIMATH ANDAVAN ASHRAMAM
MAYA KUND RISHIKESH SHAKHA







## IMPORTANCE OF CHAATURMASYA SANKALPAM & VRATHAM

- 4 months:: starting from Aavani and ending with kaarthikai
- Rainy season
- Jeevarasies like insects & worms more in the soil during this time
- Sancharam by yathies during this period might cause accidental death to these living entities
- Yathies take a vow not to travel during these 4 months
- Stay in one place
- This vratham is also known as Chaaturmasya Vratham.
- For all types of yathies, this vratham is important
- Power of this vratham increases every day from day one to the last day of the observance.
- The yathies during these 2/4 months perfom japam, homam,aaradhanam, upadesham and study of Shashtras.
- These yield greater fruits during the entire year.
- Period : 2/4 months
- Ideally it is 4 months from sayana ekadasi (Aashada Shukla ekadasi ) to Utthana ekadasi in the month of Karthikai
- Lord Vishnu::
  Sayana ekadasi: Starts HIS Yoga nidhra
  Utthana ekadasi: Lord wakes up.
- These 4 months:
  Aashada-July-August Lord Sridharan
  Bhadrapadha-Aug-Sept Lord Hrushikesasn
  Asvina- Sep-Oct Lord Padmanabhan
  Karthika- Oct-Nov Lord Dhamodharan

- Daily routine during CV
  -The Nithya karmas
  -Abhigamana Aaradhanam
  -Mruth sangrahanam

- Small amount of soil (earth) is consecrated (Mruth sangrahanam) along with aavahanam & aaradhanam for BhooVaraha perumal & Bhoo piraatti
- HH collects the soil required for HIS anushtanams during the CV
- There is a veda vAkyam which says "pakshA vai mAsA:" i.e. a paksha (15 days) can be considered as a month.
- Since it is very difficult nowadays for yathis to stay in a place for 4 months due to their sishyas wishes for their achArya to undertake sanchAram constantly and reach out to them, the sankalpam is nowadays undertaken by yathivaras for 4 pakshams i.e. 2 calendar months instead of 4 calendar months.
- This vratham is generally started on the Pournami following Aani- AmAvAsyai and completed on the Pournami day following Aavani-AmAvAsyai.

...Excerpts from PPT of Oppiliappan Koil Vardachari Sadagopan





## Other activities

- Thurumudi Vilakam
- Purifying bath for special aaradhanam
- Recital of Pancha shanti manthras on HH's arrival after snanam

**Main sankalpam**

By HH::
"Aashada pournamasi paryantham chaaturmasya vratham sthaasye."

By Sishyas gathered there::
"Nivasanthu sukeen athra gamishyamaha krutharthan yatha shakthi cha sishrusam karishyamo vayam mudha."

(Oh aacharya, please stay in this location with all happiness & bless us to have the opportunity to perform kainkaryams for you. We take the vow to serve you to the best of our abilities.)

- chant Bhoo sooktha
- veda parayanam during the aradhanam
- Divya desa Maalai Maryadhai to HH
- Lord blesses HIM for successful observance of Chaaturmasyam

**Dietary restrictions during this period**

Root, leaf, shoot, tip, fruit, skin, sprout, stalk, flower and skin of vegetables

**Athri Smuruthi says::**

"The Lord has 2 forms. Moving & unmoving. The moving form is the yathi and the unmoving sthira bheram is the Lord in archa form worshipped at the temple."

The significance of starting the sankalpam on Aashada Pournami: is that it is celebrated as the avathAram day of the great sage VyAsa who organized the Apourusheya Vedas into 4 major sections.(Rig: 1131 Sakhas or Recensions divided into Rig (21 sakhas), Yajur: 101 sakhas, Sama: 1000 sakhas and Atharvana Veda: 9 sakhas); wrote the Brahma Sutras

**(555 Sutras); wrote 18 Maha Puranas which includes Srimath BhAgavatham (Brahma Purana, Padma Purana, Bhagavata Purana, Siva Purana, Skanda Purana, Garuda Purana, Brahmanda Purana etc. Of these 18, Vishnu Purana was written by Vysacharya's father Parasaracharya, but was edited and presented by Vyasa). He is also celebrated as "VyAsAya vishnu rupAya vyAsa rupAya vishnave" in Vishnu Sahasranam and by our Swami Desikan as "mey alladhu viLambhadha vyAsan kAttum vilakillA nan neRiyE viRaindhu selveer". Such is the great significance of this chAturmAsya sankalpam day.**





# Our Asrama Perumal at Hrishikesh asramam



**HH on 3.07.2023**




## <u>நமது பூர்வாசார்யார்களின் விரத விவரங்கள்</u>

| <u>ஆசார்யனின் திருநாமம்</u> | <u>சாதுர்மாஸ்யம்</u> |
|---|---|
| திருக்குடந்தை தேசிகன்<br>கோபாலார்ய மஹாதேசிகன்<br>(3 சன்யாச சிஷ்யர்கள்) | இல்லை |
| வழுத்தூர் ஆண்டவன் | 52 |
| திருத்துறைப்பூண்டி ஆண்டவன் | ** |
| பெரியாண்டவன் | 55 |
| சின்னாண்டவன் | 10 |
| காடேந்தேதி ஆண்டவன் | 4 |
| தேரெழுந்தூர் ஆண்டவன் | 23 |
| ஆக்கூர் ஆண்டவன் | 17 |
| தென்பரை ஆண்டவன் | 15 |
| திருக்குடந்தை ஆண்டவன் | 26 |
| மைஸூர் ஆண்டவன் | 1 |
| ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் | 29 |

** விவரங்கள் தெரியவில்லை



# சாதுர்மாஸ்ய வ்ரதம்-1

- சாதுர்மாஸ்ய வ்ரதம் என்பது துறவிகள் மழைக்காலமான ஆடி மாத பௌர்ணமி முதல் கார்த்திகை மாத பௌர்ணமி வரை, நான்கு மாதங்கள் ஒரே இடத்தில் தங்கி, (தற்போது பக்ஷோ வை மாஸா: என்கிற ரீதியில் 4பக்ஷங்களை 4மாதமாகக் கொண்டு) வேத வேதாந்தங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்வார்கள். இந்த மாதங்களில் துறவிகள் உணவு முறையில் சில கட்டுப்பாடுகளை வகுத்துக் கொள்வார்கள். முதல் மாதம் உணவில் காயும் பழங்களும் இருக்கும். இரண்டாம் மாதம் பால் தவிர்ப்பார்கள். மூன்றாம் மாதம் தயிரை தவிர்ப்பார்கள். நான்காம் மாதம் பருப்பு வகைகளைச் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்
- இந்த சாதுர்மாஸ்ய காலத்தில் கடைபிடிக்கும் விரதத்தை வேதம் மற்றும் வேதாந்தக் கல்வியை கற்பித்த ஆசார்யர்களை நினைவு கூறும் வகையில் ஆடி மாத பௌர்ணமி அன்று துறவிகள் வேதவ்யாசரை வழிபட்டுத் துவக்குவார்கள். குரு பூர்ணிமா என்று அழைக்கப்படும் வ்யாச பௌர்ணமி நாளில் (ஆடிப் பௌர்ணமி) எங்கிருந்தாலும் ஆசார்யாளை மனதார வணங்கினால் தாங்கள் பெற்ற வேதாந்தக் கல்வி மேன்மேலும் சிறப்பாக வளரும் என்பது நம்பிக்கை.
- ஆஷாட பௌர்ணமி வ்யாச பௌர்ணமி என்று போற்றப்படுகிறது. எனவே வ்யாச பௌர்ணமி தொடங்கிய நாளிலிருந்து அடுத்த நான்கு மாதங்கள் மழைக்காலமாகும். இந்தக் காலகட்டத்தில் பல்வேறு ஜீவராசிகளும் இடம் பெயர்ந்து வாழுமாம். எனவே இந்தக் காலகட்டத்தில் ஸந்யாசிகள் அவற்றுக்குத் தொந்தரவு ஏற்படா வண்ணம் ஒரே இடத்தில் தங்கியிருப்பார்கள்.
- ஆஷாட பௌர்ணமி அன்று சாதுர்மாஸ்ய வ்ரதம் செய்து அந்த நாள் முதல் ஒரே இடத்தில் நான்கு மாதங்களுக்குத் தங்கியிருப்பார்கள். இந்த நான்கு மாதமும் உணவு அடிப்படையில் சில கட்டுப்பாடுகளோடு ஒரு விரத முறையையும் அனுஷ்டிப்பார்கள். இதற்கு சாதுர்மாஸ்ய வ்ரதம் என்று பெயர்.
- இந்தக் காலகட்டத்தில் அவர்கள் பூஜைகள், மந்திர ஜபங்கள், வேத, வேதாந்தக் கல்விகளை கற்பித்தல் ஆகியவற்றில் ஈடுபடுவார்கள். இந்தக் காலகட்டத்தில் செய்யும் மந்திர ஜபங்கள் தனக்கு மட்டுமன்றி உலகம் முழுமைக்கும் பன்மடங்கு பலன் தர பூர்வாசார்யர்களை ப்ரார்த்திப்பார்கள்.
- ஸந்யாசிகள் மட்டுமன்றி இல்லறத்தில் இருப்பவர்களும் கட்டாயம் இந்த நான்கு மாதமும் தினமும் ஒரு குறிப்பிட்ட கால அளவை நிர்ணயித்து (5 நிமிடம் முதல் அவரவர் வசதிக்கு ஏற்ப நேரம் ஒதுக்கி) பகவானின் நாமத்தை தினமும் உச்சரித்து வந்தால் சகல துன்பங்களும் நீங்கும் என்பது ஐதிகம்.
- அவரவர்களின் இஷ்ட தெய்வ நாமத்தை உச்சரிக்கலாம். குறிப்பாக நீங்கள் வழிபடும் மகானை நினைத்து அவர் படத்துக்குத் தினமும் ஒரு மலராவது சாத்தி வணங்குவது சிறப்பானது.
- நம் வாழ்வில் இருக்கும் பல பிரச்னைகள் தீர்க்க இந்தக் காலகட்டத்தில் செய்யும் இத்தகைய வழிபாடுகள் பயன் அளிக்கும்.



# சாதுர்மாஸ்ய விரதம்-2

- ஒவ்வொரு வருடமும் ஸூர்யன் கடக ராசிக்கு வரும் போது மஹா விஷ்ணு யோக நித்திரையில் ஆழ்ந்து , ஸூர்யன் துலா ராசி ப்ரவேசிக்கும் போது விழித்து எழுகிறார்.

- தேவசயனி ஏகாதசியிலிருந்து தேவோத்தானி ஏகாதசி வரை சாதுர் மாஸ்ய விரதம் அனுஷ்டிக்க வேண்டும். துவாதசி, பௌர்ணமி, அஷ்டமி, அல்லது மாத பிறப்பிலிருந்து விரதத்தை தொடங்கி கார்த்திகை மாதம் சுக்ல பக்ஷ துவாதசியில் நிறைவு செய்ய வேண்டும்.

- ஶ்ராவண (ஆவணி) மாதத்தில் காய்கள், பழம்;
- பாத்ரபத ( புரட்டாசி)மாதத்தில் தயிர்,
- ஆசுவின ( ஐப்பசி)மாதத்தில் பால்,
- கார்த்திகம் மாதத்தில் பருப்பு வகைகள் சாப்பிடாமல் இருந்தால் நோய் நொடி இல்லாத பூரண ஆரோக்கியம் கிட்ட பெறுவர்.

- ஆஷாட மாதம் சுக்ல பக்ஷ த்வாதசி முதல் கார்த்திகை மாதம் ஏகாதசி வரையில் நான்கு மாதங்கள் நாம் உட்கொள்ளும் உணவில் ஒரு சில வற்றை விலக்கி கட்டுபாடுகளுடன் இருப்பதே சாதுர்மாஸ்ய வ்ரதம்.
- ஶ்ராவண (ஆவணி) மாதத்தில் உணவில் விலக்க வேண்டியது :காய்,, புளி, மிளகாய், தேங்காய்.
- பாத்ரபத ( புரட்டாசி)மாதத்தில் தயிர் மற்றும் அவற்றால் தயாரிக்கும் பொருட்கள் கூடாது. தயிறில் ஒன்றுக்கு நான்கு பங்கு ஜலம் விட்டு மோராக உபயோகிக்கலாம். நிறம், தரம்,, ருசி குணம் மாறி விடுவதால் மோர் சாப்பிடலாம்.

- ஆசுவின ( ஐப்பசி)மாதத்தில் பால் மற்றும் பாலை கொண்டு தயாரிக்கும் உணவு வகைகள் கூடாது. ஆனால் தேங்காய் பால் உபயோகிக்கலாம்.
- கார்த்திகம் மாதத்தில் த்வி தள விரதம். அதாவது தானியங்களை உடைத்தால் இரு அல்லது பல விதைகள் இருக்கும். ஆதலால் பருப்பு வகைகள் , புளி மிளகாய். காய்கறிகள் சாப்பிடக்கூடாது. ஆனால் வாழைக்காய், வாழைதண்டு, வாழப்பூ,, சேனை, வள்ளிகிழங்கு, இஞ்சி, மாங்காய் இஞ்சி, பொன்னாங்கண்ணி ஆகியவை உபயோகிக்கலாம்.. இதனால் ஆரோக்கியம், குடும்ப அமைதி உண்டாகும்.



# சாதுர்மாஸ்யம்

[ஸ்ரீ உப. வித்வான் ஈ. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி,
திருவத்திபுரம்]

மாஸே பவம் - மாஸ்யம்; மாதத்தில் செய்யப்பெறுவது மாஸ்யம். சதுர்ஷு மாஸேஷு பவம் - சாதுர்மாஸ்யம்; நான்கு மாதங்களில் செய்யப்பெறுவது சாதுர்மாஸ்யம். இங்கே, 'நான்கு மாதங்கள் என்றால் எவை? நான்கு மாதங்களில் செய்யப்பெறுவது என்ன?' என்ற வினா எழும். வர்ஷாகால மான நான்கு மாதங்களையே சாதுர்மாஸ்யம் என்ற சொல் குறிக்கிறது.

வர்ஷார்த்தமஷ்டௌ ப்ரயதேத மாஸாந்,
ராத்ர்யர்த்தஹேதோர் திவஸம் யதேத |
வார்தக்யஹேதோர் வயஸா நவேந
பரத்ரஹேதோரிஹ ஜந்மநா ச ||

பரம நாஸ்திகர்களையும், மிகுந்த போகத்தில் ஆழ்ந்திருப்ப வர்களையும், உயர்ந்த உத்தியோகத்திலும் பெரிய வியாபாரத்தி லும் ஈடுபட்டு அவகாசமே இல்லாதவர்களையும் நல்வழியில் ஈடுபடச் செய்வதற்கு ஸாரமானதும், உயர்ந்த கருத்தைக் கொண்டதும், மேற்கொண்டு அறிய ஆவல் பிறப்பிப்பதும், மனத்தைக் கவருவதுமான தத்துவத்தைச் சுருக்கமாகக் கூற வேண்டும். இவ்வாறு ஒருவரால் மற்றவருக்குக் கூறப்பெற்ற ச்லோகம் இது.

கண்ணுக்குப் புறம்பான அழியாத பேரின்பத்தைப் பெற இந்தப் பிறப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை உறுதிப்படுத்த, கண்ணுக்கு இலக்கான மூன்றை உவமையாக இந்த ச்லோகத்தில் காட்டியிருக்கிறார்கள்.

1. மழைக்காலத்தில் வெளியில் செல்ல முடியாததனால், அப்பொழுது சரீரபோஷணத்துக்கு மற்ற எட்டு மாதங்களில் பொருள்களைச் சேகரித்துக்கொள்ள வேண்டும்.

2. இரவின் சுகத்துக்காகப் பகலில் உழைக்க வேண்டும்.

3. முதுமைப் பருவத்தில் நலமுடன் வாழ இளமையில் பாடுபட வேண்டும்.

இப்படி இந்த மூன்றை உவமையாகக் காட்டி, அப்ரத் யக்ஷமான பரமசுகத்திற்கு இந்தப் பிறவியைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறுகிறது இந்த ச்லோகம். இங்கே மழைக் காலம் நான்கு மாதங்கள் என்று தெரிகிறது.

மகாகவி காளிதாஸனின் 'மேகஸந்தேஶ'த்தில், 'தஸ்மிந்- நத்ரௌ கதிசிதபலாவிப்ரயுக்தஸ் ஸ காமீ நீத்வா மாஸாந்' என்ற ஶ்லோகத்தில், 'கதிசிந் மாஸாந்' என்ற பதத்திற்கு,

'அஷ்டௌ மாஸாந்' என்று உரை வகுத்திருக்கிறார் மல்லிநாதர். மேலே, 'ஶேஷாந் மாஸாந் கணய சதுர:' என்பதனால், கழிக்க வேண்டிய வர்ஷாகாலம் நான்கு மாதங்கள் என்று தேறுகிறது.

மழைக் காலத்தில் தேவையில்லாமல் அதிகமாக வெளியில் நடமாடக்கூடாது. குளிர்ந்து ஈரப்பசையுள்ளபடியால் எங்கும் ஜந்துக்கள் அதிகமாகத் தோன்றும். அவை காலில் அகப்பட்டு இறக்க நேரிடும். 'த்ருஷ்டிபூதம் ந்யஸேத் பாதம்' என்றபடி, சாதாரண காலத்திலேயே பெரியோர் குனிந்து பார்த்தே கால் வைத்து நடப்பார்கள். மழைக் காலத்தில் மிகுந்த எச்சரிக்கையோடு நடப்பார்கள். துறவிகள் இதை மிகவும் அவசியமாகப் பின்பற்றுகின்றனர். இதற்காக வராகப்பெருமாள் நாயனாரையும் பூமிப்பிராட்டியையும் பூஜித்து ஸங்கல்பம் செய்துகொண்டு ஸ்நானம் முதலானவற்றுக்கு நல்ல இடத்திலிருந்து மண்ணைச் சேகரித்து வைத்துக்கொள்வார்கள்.

சாதுர்மாஸ்யத்தில் விஷ்ணுவைப் பூஜிக்க வேண்டும் என்று விதித்துள்ளது.

> ஆஷாடஸ்ய ஸிதே பக்ஷே, ஏகாதஶ்யாமுபோஷித: |
> சாதுர்மாஸ்யவ்ரதாநீஹ க்ருஹ்ணீயாத் பக்திபூர்வகம் ||

ஆஷாடமாதத்தில் சுக்லபக்ஷ ஏகாதசியில் உபவாஸம் விரதத்தை அநுஷ்டிக்க வேண்டும். இந்த ஆஷாட சுத்தப்ரதமை ஆனிமாத இடையிலும் வருவதுண்டு.

> மிதுநஸ்தே ஸஹஸ்ராம்ஶௌ பூஜயேந் மதுஸூதநம் |
> துலாராஶௌ கதே ஸூர்யே புநருத்தாபயேத் ஹரிம் ||

ஆனி மாதத்தில், ஆஷாட சுத்த ஏகாதசியில் பகவான் சயனித்துக்கொள்ளுகிறார். இதை, 'ஶயன ஏகாதசி' என்று கூறுவர். புரண்டு சயனித்துக்கொள்வதைப் 'பரிவர்த்தன ஏகாதசி' என்றும், ஐப்பசி மாதத்தில் எழுந்திருப்பதை 'உத்தான ஏகாதசி' என்றும் கூறுகின்றனர். இந்த மாதங்களில் விவாகாதி சுப காரியங்களைச் செய்யாமல், பகவானைப் பூஜிப்பர். சக்ரம் சங்கம் கதையோடு கூடிய விஷ்ணுப் பிரதிமையில் விஷ்ணுவை ஆவாகனம் செய்து அர்க்ய பாத்ய ஆசமனாதிகளைச் சமர்ப்பித்துப் பால் தயிர் தேன் பொரி நெய் இவற்றினால் திருமஞ்சனம் செய்து, கந்த புஷ்ப தூப தீபாதி உபசாரங்களைச் சமர்ப்பித்து நிவேதனம் செய்து, இதிஹாஸ புராணங்களைப் படனம் செய்து,

> ஸுப்தே த்வயி ஜகந்நாதே ஜகத் ஸுப்தம் பவேதிதம் |
> விபுத்தே த்வயி புத்யேத ஜகத் ஸர்வம் சராசரம் ||

''ஜகந்நாத! தேவரீர் யோகநித்திரை கொள்ளும்பொழுது அண்ட சராசரங்கள் யாவும் நித்திரையடைகின்றன (மங்குகின்றன). தேவரீர் யோகநித்திரையை விடும்போது உலகம் விழித்தெழுகிறது. ஆகையால், தேவரீர் நித்திரை கொள்ளும் பொழுது விரதத்துடன் தேவரீரைப் பூஜிக்கிறேன்'' என்று ஸங்கல்பம் செய்துகொண்டு விரதத்தை அநுஷ்டிப்பார்கள்.

இந்த விரதகாலத்தில் இனிப்பை விட்டால் எல்லாருக்கும் இனியனாக இருப்பான். எண்ணெயை விட்டால் அவிச்சின்ன

மான ஸந்ததியைப் பெறுவான். காரத்தை விட்டால் சத்துரு ஜயம் உண்டாகும். நெய் அருந்துவதை விட்டால் அழகான அங்கங்களைப் பெறுவான். வாசனைத் திரவியங்களை விட்டால் ஸௌபாக்கியத்தைப் பெறுவான். புஷ்பத்தையும் போகத்தையும் விட்டால் ஸ்வர்க்கவாஸம் ஏற்படும். யோகத்தை அவலம்பிப்பவன் பரமபதத்தை அடைவான். தாம்பூலத்தை விட்டவன் இனிய குரலைப் பெறுவான்.

ஹரௌ ஸுப்தே விஶேஷேண ஹரேர் நாம படந் ஜபந் |
தத்பலம் கோடிகுணிதம் லபதே த்விஜஸத்தம ||
ஸ்நாநம் தாநம் ஜபோ ஹோம:
ஸ்வாத்யாயோ தேவதார்ச்சநம் |
சாதுர்மாஸ்யக்ருதம் யச்ச ஸர்வம் ஹி சாக்ஷயம் பவேத் ||
ஏககாலம் த்விகாலம் வா புராணம் ஶ்ருணுதே ச ய: |
ஸர்வபாபவிநிர்முக்தோ விஷ்ணுலோகம் ஸ கச்சதி ||

சாதுர்மாஸ்யத்தில் ஹரிநாம ஸங்கீர்த்தனம், ஸ்நானம் ஜபம் ஹோமம், புராண இதிஹாஸ படனம் தேவதாபூஜனம் இவற்றை நியமத்துடன் செய்வது அவசியம். இவற்றுள் ஒவ்வொன்றும் பெரும்பயனை அளிக்கும்.

மது பக்ஷயதே யஸ்து ஸுப்தே தேவே ஜநார்தநே |
மஹத் பாபம் பவேத் தஸ்ய வர்ஜநே யத் ஶ்ருணுஷ்வ தத் ||
ஸர்வயஜ்ஞைஶ்ச விவிதைர் யத் பலம் ததவாப்நுயாத் |
ய: க்ஷிபேதேகபக்தேந நரோ மாஸசதுஷ்டயம் ||
யாவந்தி ச முஹூர்த்தாநி உதிதோதிதபாஸ்கரே |
தாவத் வர்ஷஸஹஸ்ராணி விஷ்ணுலோகே மஹீயதே ||
வித்தவாந் ஸுபகஶ்சைவ குலே ஶ்ரீமதி ஜாயதே |
துலஸீதிலதர்பைஶ்ச யே குர்வந்தி ச தர்ப்பணம் ||
தத்பலம் கோடிகுணிதம் சாதுர்மாஸ்யே விஶேஷத: |
யதா ஸுப்தே ஹ்ருஷீகேஶே
குர்யாத் சைதத் த்ரயாந்விதம் |
பதம் வா பதமர்தம் வா ரிசாம் சார்தரிசாம் ததா |
விஷ்ண்வக்ரே யே ப்ரகாயந்தி
முக்தாஸ்தே நைவ ஸம்ஶய: ||

பகவான் யோகநித்திரையில் இருக்கும்போது விரதம் இருக்க வேண்டும். இந்த விரத சமயத்தில் போக்கியமான வஸ்துக்களைச் சாப்பிடுவது குற்றம். குற்றமுள்ளதை விலக்கி விரதமிருந்தால் எல்லாப் பாக்கியபலனும் உண்டாகும். ஒரு வேளை ஆகாரம் கொள்பவன் விஷ்ணுலோகத்தில் கொண்டாடப் பெறுகிறான். பிறகு மறுபிறப்பில் உயர்ந்த குலத்தில் பிறந்து மேன்மையடைவான். துளசி திலம் தர்ப்பம் இவற்றினால் தர்ப்பணம் செய்வது பல கோடி மடங்கு அதிகமான பலனைக் கொடுக்கும். இக்காலத்தில் பகவத் ஸந்நிதியில் வேதாத்தியயனம் செய்தால் முக்தியை அடைவார்கள்.

பகவான் யோகநித்திரை கொள்ளுகிறவரையில் விரதம் இருந்து உத்தானமான பிறகு விரதோத்யாபனம் செய்ய வேண்டும். அப்பொழுது பிராம்மணர்களுக்கு அறுசுவையுணவு அளித்து, விசேஷ தானாதி உபசாரங்களைச் செய்து, திருப்தி

செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் ப்ரஹ்மலோகப்ராப்தி பர்யந்தமான பலன் ஏற்படும்.

இந்தச் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தைச் சில ஸம்பிரதாயஸ்தர்கள் வியாஸ பூஜை என்று பெயரிட்டு அழைப்பர். ஆஷாட பூர்ணிமையை வியாஸ பூர்ணிமை என்று அழைப்பது வழக்கம்.

சாந்திராயணரீதியான ஆஷாட சுத்தம் ஆனி மாதத்திலே சில சமயம் வரும். ஆக அந்தப் பௌர்ணமியும் ஆனி மாதத்திலேயே வருவதுண்டு. அந்தச் சமயத்தில் வேதவியாஸரையும் ஆசார்யர்களையும் எலுமிச்சம்பழத்தில் ஆவாகனம் செய்து பூஜிப்பார்கள். ஆறு பிரிவுகளாகக் கொள்வர். ஒவ்வொரு பிரிவிலும், ஞானத்திற்கு மூலபுருஷர்களாக இருக்கும் ஐந்து பேரை ஆவாகனம் செய்து பூஜிப்பார்கள்.

விஷ்ணுவின் அவதாரமாய், பரத்துவத்தையும் ஸௌலப்யத்தையும் நன்ருகப் பிரகாசப்படுத்தின கிருஷ்ண பரமாத்மாவை மத்தியில் ஆவாகனம் செய்து, அவருடைய அம்சசக்திகளான வாஸுதேவ - ஸங்கர்ஷண - ப்ரத்யும்ந - அநிருத்தர்களை நான்கு பக்கங்களிலும் ஆவாகனம் செய்வர். இதை, 'கிருஷ்ண பஞ்சகம்' என்பர்.

இரண்டாவதாக, நாராயணனுடைய அவதாரமான வியாஸரை மத்தியில் ஆவாகனம் செய்து, அவருடைய சிஷ்யர்களான ஸுமந்து, ஜைமினி, பைலர், வைசம்பாயனர் என்ற நால்வரை நான்கு திசைகளிலும் ஆவாகனம் செய்து பூஜிப்பர். இதற்கு, 'வியாஸபஞ்சகம்' என்று பெயர்.

மூன்ருவதாக, ஆதிசங்கரரை மத்தியிலும், அவருடைய சிஷ்யர்களான பத்மபாதர், ஸுரேஶ்வரர், ஹஸ்தாமலகர், தோடகர் என்ற நால்வரை நான்கு பக்கங்களிலும் ஆவாகனம் செய்து பூஜிப்பர். இதை, 'பகவத்பாதபஞ்சகம்' என்பர்.

நான்காவதாக, பிரம்மஞானிகளும் பிரம்மபுத்திரர்களுமான ஸனகாதிகளைப் பூஜிப்பது. ஸனகரை நடுவிலும், ஸநந்தன - ஸநாதன - ஸநத்குமார - ஸநத்ஸுஜாதர்களை நாற்புறங்களிலும் ஆவாகனம் செய்து பூஜிப்பர். இதற்கு 'ஸனகபஞ்சகம்' என்று பெயர்.

ஐந்தாவதாக, திரவிடாசாரியரை மத்தியிலும், சங்கர பகவத்பாதரின் ஆசார்யரான கோவிந்தபாதரையும், ப்ராசார்யரான கௌடபாதரையும், அத்வைதமத முக்யஸ்தர்களான ஸம்க்ஷேபகாசார்யரையும், விவரணுசார்யரையும் நான்கு திக்குகளில் ஆவாகனம் செய்து பூஜிப்பர். இதை, 'த்ரவிட பஞ்சகம்' என்பர்.

ஆருவது, விரதாநுஷ்டானம் செய்பவருடைய ஆசார்யரையும், அவருடைய ஆசார்யரையும், அவருடைய ஆசார்யரையும், அவருக்கும் ஆசார்யரான குருவையும் ஆவாகனம் செய்து பூஜிப்பர். இதற்கு, 'குருபஞ்சகம்' என்று பெயர். இப்படி வியாஸபூஜையை அத்வைத மதஸ்தர்கள் நடத்துகிருர்கள். எந்தப் பெயரிட்டாலும் பகவானையும் பகவத்பக்தர்களையும் பகவானுடைய சயனம் முதற்கொண்டு உத்தான பர்யந்தமான வர்ஷாகாலமான நான்கு மாதங்களில் ஸங்கல்பித்துக்கொண்டு பூஜை நடத்துகிறபடியால், இதைச் 'சாதுர்மாஸ்யம்' என்று கூறுவது பொருத்தமேயாகும்.





## POORVASHRAMAM OF HH SRI VARAHA MAHADESIKAN

**In poorvashramam, HH 12th Srimad Andavam was known as Dr Shri Srimushnam Vangipuram Yamunachariar. HH was the 3rd son in Poorvasrama of HH Srimad Srimushnam Andavan. Shri Yamunachariar Swami qualified as a PhD from BharathiDasan University in 2009 after qualifying as Vyakarana Siromani (1989), MA (Sanskrit) (2000) & MPhil from BharathiDasan University (2002). Yamunachariar Swami has undergone extensive Kalakshepams (Grantha Chatushtyam) under great srivaishnavaite scholars & saints like HH Srimad Thirukkudanthai Andavan Swami (9th Peetathipathi of Srimad Andavan Asramam) renowned as the Tiruppavai Jeer, HH Srimad Srimushnam Andavan (11th Andavan Swami) & Late Padma Bhushan Dr Shri NS Ramanuja Tatachariar Swami (Retd VC of Sanskrit Vidya Peetam at Tirupati, recipient of 'President of India' award for great sanskrit scholars & "Chevalier" award – highest civilian award for foreigners by French Government) et al. The Swami's PhD thesis is in Mimamsa Sastra by researching on a book by late Shri Tirupputkuzhi Swami on Shri Kumarila Bhattar's Mimamsa: the Swami is well versed is Sanskrit & Tamizh.**

**HH Srimad Srimushnam Andavan has performed Manthropadesams (Preksha Mantram) to Shri Yamunachariar many years ago, a pre-requisite for taking Sannyasa. HH Srimad Srimushnam Andavan had also instructed 4 Sishyas that in the event of any danger of the Peetam being vacant, they should ensure that Sri Yamunan must be considered.**

# Chatur maasya Sankalpam for 2023

## Details pertaining to other prakrutham pontiffs (Major ones only)

| | | Place | Dates |
|---|---|---|---|
| 1 | Ahobila mutt-46th Jeer  | Ahobilam | 3.07.2023 to 30.09.2023 |
| 2 | Parakala mutt-36th Peethaadhipathi  | Mysore | 3.07.2023 to 30.09.2023 |
| 3 | Poundaripuram Andavan asramam-10th Peetaadhipathi  | SriRangam | 7.07.2023 to 30.09.2023 |

# Srirangam Srimath Andavan Asramam




**HH Sri Varaha Mahadesikan**
**Will camp at Hrishikesh**
**from 3.07.2023 to 30.09.2023**

*************************************************

**Sishyas are requested to visit Hrishikesh before 30.09.2023, participate in the Dhadhiyaradhanai and take HH's blessings.**

*************************************************

**For stay at Hrishikesh**
**contact details:**
**Dharmaraj, caretaker**
**Srirangam Srimath Andavan Asramam Hrishikesh**
**Mob No :: 9411530773**

*************************************************